**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 22** **நாள்: 24.03.2026**

**வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், விழிப்புணர்வு இயக்கப் பலகையில் கையொப்பமிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.**

இன்று (24.03.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், 100 சதவீதம் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கப் பலகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் கையொப்பமிட்டு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, அனைத்து அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் விழிப்புணர்வு கையெழுத்துப் பலகையில் கையொப்பமிட்டனர்.

தொடர்ந்து, எனது வாக்கு எனது உரிமை என்ற சுயபுகைப்பட (Selfie Point) பதாகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் இடது கை ஆட்காட்டி விரலை உயர்த்தி புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். பின்னர், தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கி சென்னை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

**பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:**

பெருநகர சென்னை மாநகராட்சியின் வரம்பில் உள்ள 22 சட்டமன்றத் தொகுதிகளில் 16 சட்டமன்றத் தொகுதிகள் சென்னை மாவட்டத்தின் கீழ் உள்ளன. இந்த 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. சென்னையை பொறுத்தவரைக்கும் வாக்குப்பதிவு என்பது மாநில அளவைப் பார்க்கும் போது சராசரியை விட குறைவாகத் தான் இருக்கும். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக தேர்தல் மூலம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (SVEEP Activities) நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் அதிகமாக பார்க்கப்படும் ஒரு பறவை காகம். எனவே, காகத்தை ஒரு சின்னமாக (Mascot) வைத்து தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பேருந்து நிறுத்தப் பயணியர் நிழற்குடைகளில் "என்

வாக்கு என் உரிமை" என்ற விழிப்புணர்வு வாசகத்துடன் விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் மாநகரப் பேருந்துகளின் பின்புறம், மெட்ரோ இரயில் நிலையங்கள், முக்கியமான பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் சுயபுகைப்பட மையம் (Selfie Point) மற்றும் காகம் சின்னத்தை (Mascot) மையப்படுத்தி விழிப்புணர்வு வாசகங்களுடன் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வாக்குப்பதிவினை அதிகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

"என் வாக்கு என் உரிமை" என்ற தலைப்புடன் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக இன்றைக்கு ரிப்பன் கட்டட வளாகத்தில் சுயபுகைப்படம் எடுத்தல் (Selfie Point) விழிப்புணர்வு பதாகை மற்றும் கையெழுத்து கையொப்பமிடும் இயக்க நிகழ்வு, "அனைவரும் வாக்களிப்போம்" என்ற உறுதிமொழியினை ஏற்று விழிப்புணர்வு நிகழ்வு தொடங்கப்பட்டுள்ளது. இதேபோல் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. வானொலி (FM), தொலைக்காட்சிகள் மற்றும் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடுதல், செய்தி வெளியீடுகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான வணிக வளாகங்கள், பூங்காக்கள், கடற்கரைகள் ஆகியவற்றில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். நீலக்கொடி கடற்கரை 1 மற்றும் 2 ஆகியவற்றில் அதிக மக்கள் வரும் பகுதியில் "என் வாக்கு என் உரிமை" என்ற வாசகத்தை வாக்காளர்களுக்கு அதிகமாக கொண்டு சேர்த்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**கேள்வி: தற்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் தொகுதி வாரியாக அனுப்பப்பட்டிருக்கா? கணினி சுழற்சி முறை செய்துவிட்டீர்களா?**

பதில்: மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (BU), கட்டுப்பாட்டுக் கருவிகள் (CU) மற்றும் வாக்குப்பதிவு உறுதிப்படுத்தும் இயந்திரங்கள் (VVPAT) ஆகியவை டிசம்பர் 3வது வாரம் தொடங்கி ஜனவரி இரண்டாம் வாரம் வரைக்குமே முதல் கட்டப் பரிசோதனை (FLC) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பரிசோதனையில் இயந்திரங்களில் ஏதாவது குறைபாடு இருக்கிறதாக என்று பார்க்கப்பட்டது. இந்த பரிசோதனையில் 2%, 3% குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது. அவை பெல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

மீதமுள்ள இயந்திரங்கள் குறைபாடுகள் இல்லாமல் வாக்குப்பதிவிற்கு தயார்நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. நேற்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் எந்த இயந்திரம் எந்த சட்டமன்றத் தொகுதிக்கு என கணினி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட இயந்திரங்களை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சேமிப்பு அறையிலிருந்து 16 சட்டமன்றத் தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பும் பணி இன்று காலை 8 மணிக்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் பாதுகாப்பு அறை திறக்கப்பட்டு, அந்த

இயந்திரங்கள் மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எந்த இயந்திரம் எந்த சட்டமன்றத் தொகுதிக்கு என கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டதோ, அதன்படி அவற்றை வரிசைப்படுத்தி இரண்டு மூன்று நாட்களுக்குள் காவல்துறையின் பாதுகாப்போடு தேர்தல் நடத்தும் அலுவலர்களின் 16 பாதுகாப்பு அறைகளுக்கும் (Strong Room) அனுப்பப்படும். இந்த அறை தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டுப்பாட்டில் தான் இருக்கும். அடுத்த கணினி குலுக்கல் முறை நடைபெற்ற பின் பாதுகாப்பு அறையிலிருந்து வாக்குப்பதிவு மையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்.

**கேள்வி: பதட்டமான வாக்குச்சாவடிகள் மற்றும் சென்னையில் குறைவான வாக்குப்பதிவு, 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாக உள்ளது மற்றும் பதட்டமான வாக்குச்சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா ?**

பதில்: சென்னையில் சிறப்பு தீவிர சுருக்கமுறை திருத்தத்திற்கு பிறகு 28.3 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். தீவிரத் திருத்தத்திற்கு முன்பு 40.16 இலட்சம் வாக்காளர்கள் இருந்தனர். அவற்றில் இருந்து வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டு தற்போது 26 இலட்சம் கொண்டு வரப்பட்டது. பின்னர் படிவம் 6ன் மூலமாக மேலும் 2 இலட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது 28.30 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இறுதி வாக்காளர் பட்டியலில் 4,079 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின் படி, இந்த 4,079 வாக்குச்சாவடி மையங்களில் 835 வாக்குச்சாவடி மையங்கள் பதட்டமானவை என கண்டறியப்பட்டுள்ளது. இந்த பதட்டமான வாக்குச்சாவடி மையங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளுக்கு CRPF காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சென்னை மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்குப்பதிவு நாளன்று காலை முதல் மாலை வரை கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த பதட்டமான வாக்குச்சாவடிகளில் நுண் பார்வையாளர்கள், மத்திய காவல் பிரிவு, கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொழுது, வாக்காளர்கள் எந்து ஒரு பயமும் இல்லாமல் வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கேள்வி: பாதுகாப்புப் பணியில் எவ்வளவு நபர்கள் ஈடுபடுத்தப்பட இருக்காங்க?**

பதில்: போதுமான அளவுக்கு CRPF காவல்படையினர், 5-6 இடங்களில் தங்கியுள்ளனர். தற்போது பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்று வருகிறது. காவல்துறையுடன் இணைந்து எந்தெந்த இடங்களில் எவ்வளவு நபர்கள் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வது என்பது முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் காவல் பார்வையாளர் வருகை தந்துள்ளார். அவர் ஆலோசனைப்படி, வாக்குப்பதிவிற்கு முன்பு வரிசைப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.

**கேள்வி: பணம் பறிமுதல் செய்வது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. சாதாரண மக்கள்கிட்ட பறிமுதல் பண்றதா வியாபாரிகள் அறிவிச்சிருக்காங்க. அவங்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?**

பதில்: இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிமுறைகளின்படி, பறக்கும் படை உள்ளிட்ட குழுக்கள் பணிகள் மேற்கொள்கிறார்கள். சில இடங்களில் பிரச்சினை தெரிவித்துள்ளனர். அதைத் தொடர்ந்து மேற்கண்ட குழுக்களுக்கு முறைப்படி பரிசோதிக்க வேண்டும். அதே மாதிரி பறிமுதல் பண்ணும் போது அதற்கான படிவங்கள் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யும் போது சம்பந்தப்பட்ட நபர் ஆவணங்கள் ஏதும் கொடுக்க முடியல, பொருட்களை பறிமுதல் பண்ணிட்டாங்க என்றால் மேல்முறையீடு செய்வதற்கு மேல்முறையீட்டுக் குழுக்கள் தயாராக உள்ளனர். உரிய ஆவணங்களை கொடுத்தா உடனே நாங்க பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை கொடுத்திடுவோம். 10 இலட்சத்திற்கு மேலாக பணம் இருந்ததுன்னா வருமான வரித்துறைக்கு தகவல் கொடுத்துருவோம், அவங்களுடைய முடிவுபடிதான் பணம் விடுவிக்கப்படும். அந்த மாதிரி பிரச்சினை கவனத்திற்கு வரும் பட்சத்தில் கண்டிப்பாக நாங்கள் ஆராய்வோம்.

**கேள்வி: சென்னையில் எந்த தொகுதிகளில் கடந்த காலங்களில் குறைந்த வாக்குப்பதிவு இருந்திருக்கு?**

பதில்: குறைந்த வாக்குப்பதிவு தியாகராயநகர் மற்றும் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிகளில் தான். ஆனால், இந்த 16 சட்டமன்றத் தொகுதியில் எப்பவுமே குறைந்த வாக்குகள் பதியக்கூடிய சட்டமன்றத் தொகுதி மட்டுமல்லாமல் அதில் இருக்கக்கூடிய அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் எங்கு குறைந்த வாக்குப்பதிவு ஏற்பட்டுள்ளது என்பதை நாங்கள் கணித்துக் கொண்டிருக்கிறோம். சென்னை மாவட்டம் என்றால் 50% - 60% தான் வாக்குப்பதிவு நடைபெறும் என்ற எதிர்மறை எண்ணங்கள் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனைப் மாற்றும் விதமாக இந்த தேர்தலில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்டிப்பாக இந்த சட்டமன்றத் தேர்தலில் 70% - 80% சதவீதம் வாக்குப்பதிவு நடைபெறும். கண்டிப்பாக சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்குப் பிறகு 80 சதவீதம் வாக்குப்பதிவு ஏற்படும் என்று நம்பிக்கை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி)), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டார துணை ஆணையாளர்), மாவட்ட தேர்தல் அலுவலர் (தேர்தல்), உதவி ஆணையாளர் (பொது நிர்வாகம்) மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**